IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, TENKASI.

OS.No.18/2024

dated : 05.03.2026

P.W. 1

Name சந்துலால் படேல்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாதி என் தந்தை. முதல் விசாரணை வாக்குமூலத்தில் என் தந்தைக்கு கண் பார்வை குறைபாடு , செவி திறன் குறைபாடு ஏற்பட்டு நடமாட முடியாமல் இருந்து வருவதாக கூறியிருக்கிறேன் என்றால் சரிதான் அதற்கு ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியுள்ளது போல் என் தந்தைக்கு எந்த குறைபாடும் இல்லை என்றும் அவர் நீதிமன்றம் ஆஜராகி சாட்சியமளித்தால் வழக்குரையில் கூறியுள்ள விவரங்கள் பொய் என்று தெரிந்துவிடும் என்பதால் அதனை மறைப்பதற்காக நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தையுடன் சேர்ந்து நானும் மர அறுவை மில்லை கவனித்து வந்தேன் என்பது குறித்து என் தந்தை தாக்கால் செய்த வழக்குரையிலோ பின்னர் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையிலோ கூறவில்லை என்றால் சரிதான். வழக்குரைச் சொத்து தென்காசி - செங்கோட்டை சாலையில் பிராணூர் பார்டர் என்ற இடத்தில் கண்ணன் டீக்கடைக்கு பின்புறமாக சாலைக்கு

வடக்கே அமைந்துள்ளது என்றால் சரிதான் அது சுமார் 1 ஏக்கர் ஆகும். அந்த இடத்தில் தற்போதைய சந்தை மதிப்பு 1 செண்டிற்கு ரூ.6,00,000/- என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 09.07.1998 ம் தேதி மேற்படி இடத்தின் அடிமனை என் தந்தை பதிவு செய்த ஆவணத்தின் மூலம் 1ம் பிரதிவாதியிடமிருந்து வாடகைக்கு எடுத்தார். அதற்கான ஒப்பந்த காலம் 10 ஆண்டுகள். ஆரம்ப வாடகை ரூ.2000/- முன்பணம் ரூ.50000/-, 10 ம் வருட முடிவில் வாடகை ரூ. 5000/-. 10 ம் வருட முடிவில் 1ம் பிரதிவாதி என் தந்தையிடம் வாடகை ஒப்பந்தத்தினை முடிவு செய்து பிராது தபசில் சொத்தினை திரும்ப கேட்டார் என்றால் சரியல்ல. 1ம்பிரதிவாதி முன்பணத் தொகையை திரும்ப கொடுத்து சுவாதீனத்தை திரும்ப கொடுத்து ஒப்படைத்தபோது என் தந்தை மேலும் சிறிது காலம் தொடர்ச்சியாக இருந்து வர 1ம் பிரதிவாதியிடம் கேட்டுக் கொண்டு அனுமதியின் பேரில் 1ம் பிரதிவாதி அனுமதித்தார் என்றால் சரிதான். 24.08.2017 ம் தேதி 1ம் பிரதிவாதி வழக்குரைச் சொத்தை 2 ம் பிரதிவாதிக்கு நன்கொடை ஆவணம் மூலம் கொடுத்துவிட்டார் என்றால் அது வழக்கிற்கு பின்னர்தான் தெரியவந்தது. வழக்கு தாக்கல் செய்யும்போதே 2 ம் பிரதிவாதியையும் தரப்பினராக சேர்த்துதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கிற்கு முன்னதாகவே நன்கொடை எழுதிக் கொடுத்த விவரம் தெரியும் என்றும் அதனால்தான் அவரையும் வழக்கின் தரப்பினராக சேர்த்து என் தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி வழக்கிற்கு முன்பே என் தந்தையை சந்தித்து முன் பணத்தை பெற்றுக் கொண்டு சொத்தை திரும்ப தரும்படி

03.07.2018 அன்று கேட்டார். நான் தென்காசி தெற்கு மாசி வீதியில் சங்கரி ஜெராக்ஸ் என்ற கடைக்கு அருகில் பதஞ்சலி நிறுவன பொருட்களை விற்கும் கடை நடத்தி வந்தேன் என்றால் சரிதான். அந்த கடையின் உரிமையாளர் மற்றும் எனக்குமிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு நான் அங்கிருந்து வெளியேறி அதே சாலையில் ஆனந்தபவன் ஹோட்டல் அருகே கடை நடத்தி வருகிறேன் என்றால் கருத்து வேறுபாடு ஏதும் இல்லை ஆனால் கடையை மாற்றிக் கொண்டேன். அந்த கடைக்கான பொருட்களை தென்காசியிலேயே சேமித்துக் கொள்வேன். நான் தென்காசியில் அதனை சேமித்து வைப்பதில்லை என்றும் வழக்குரைச் சொத்தில் மேற்படி கடைக்கான பொருட்களை சேமிப்பாக வைத்திருப்பேன் என்றால் சரியல்ல. மரஅறுவை நிறுவனம் நடத்துவதற்காக மட்டுமே எனக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது என்றும் நான் அதற்கு மாற்றாக பதஞ்சலி நிறுவன பொருட்களை வைத்திருக்கும் சேமிப்பு கிடங்காக மாற்றினேன் என்றால் சரியல்ல. ஒப்பந்தப்படி மரஅறுவை மில்லிற்கான வாடகைக்கு பெற்ற நிலையில் அதை பதஞ்சலி நிறுவன பொருட்களை வைப்பதற்கான சேமிப்பு கிடங்காக மாற்றியுள்ளதால்தான் மீண்டும் 2ம் பிரதிவாதி வாதியை அனுகி சுவாதீனத்தை ஒப்படைக்கும்படி கேட்டார் என்றால் சரியல்ல. செங்கோட்டை பிராணூர் பார்டர் வழக்கு சொத்தின் முகவரியில் நாங்கள் ஏற்கனவே செய்து வந்த மர அறுவை வியாபாரத்துடன் பதஞ்சலி நிறுவன மொத்த விற்பனையையும் மேற்கொண்டோம் அதனால் மொத்த விற்பனைக்கான பொருட்களை வைத்திருந்தோம். அந்த

விவரங்களை வழக்குரையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு ஜூலை மாதம் வாதி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.8 ற்கான புகார் மனுவை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இருவரையும் விசாரித்தார்கள் அங்கு வாதி எழுதிக் கொடுத்த வாக்குமூல நகல் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் இடத்தை காலி செய்து தருவதாக ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்தோம் என்றால் சரிதான் நான்தான் எழுதிக் கொடுத்தேன். நான் ஒரு வருடம் காலஅவகாசம் கோரினேன் ஆனால் அவர்கள் மூன்று மாதத்திற்குள் காலி செய்து தரும்படி வற்புறுத்தி எழுதி பெற்றனர். நான் அவ்வாறு வற்புறுத்தி எழுதி வாங்கியதாக காவல் துறை மேல் அதிகாரிகளிடம் புகார் எதுவும் தெரிவிக்கவில்லை. வழக்குரைச் சொத்தில் பெரும் செலவில் கட்டிடம் எழுப்பியுள்ளதாக குறியது தொடர்பான ஆவணங்களையும் விவரங்களைம் வழக்குரையிலும், முதல் விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் ஒப்புக்கொண்டபடி 2018 ம் ஆண்டு அக்டோபர் மாதம் பிரதிவாதியிடம் சுவாதீனத்தை ஒப்படைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 இரசீதுகள் மற்றும் 5 மின் கட்டண இரசீதுகள் வா.சா-ஆ.6 வாடகை இரசீதுகள் 2018 ஜூலைக்கு முந்தைய ஆவணங்கள் என்றால் சரிதான். 2018 ஜூலைக்கு பின்னர் வழக்குரை சொத்திற்கான சுவாதீனம் எங்கள் வசம் இருப்பதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய முதல் விசாரணை

வாக்குமூலம் பத்தி 13, 14 ல் கூறியுள்ள Cr.l.OP-16311/2018 வழக்கு தொடர்புடைய எந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் மர அறுவை நிறுவனம் நடத்தி வந்தபோது சுமார் 30 முதல் 40 நபர்கள் பணிபுரிந்தார்கள் அவர்களில் 4 பேர் வழக்குரைச் சொத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வேலை செய்தார்கள். 24.12.2018 ம் தேதி நான் குஜராத் மாநிலம் பூஜ் என்ற ஊருக்கு சென்றபோது வழக்குரை சொத்தில் தொழில் நடந்து வந்தது என்பது தொடர்புடைய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வன்முறையை பயன்படுத்தி சொத்தில் அத்துமீறி நுழைந்து கட்டிடத்தை இடித்து சேதப்படுத்தியதாக கூறப்பட்டுள்ளது. எந்த தேதி யார் யார் என்னென்ன முறையில் அவ்வாறு செயல்பட்டார்கள் என்று வழக்குரையில் கூறவில்லை என் ாறல் சரிதான். வழக்குரை சொத்தில் அதுபோன்ற கட்டிடங்கள் ஏதும் இல்லை என்றும் பிரதவாதிகள் அவ்வாறு கட்டிடத்திற்கு சேதம் ஏதும் ஏற்படுத்தவில்லை என்றும் பிரதிவாதிகள் வன்முறையை பயன்படுத்தி சேதப்படுத்தியதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சேதப்படுத்தியதை நானோ, எனது முகவர்களோ புகைப்படமாகவோ, வீடியோவாகவோ அதை பதிவு செய்யவில்லை. அது தொடர்பாக காவல் நிலையத்தில் நானோ, பணியாளர்களோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுத்தோம் ஏற்க மறுத்துவிட்டார்கள். அவ்வாறு புகார் கொடுத்த நகல் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. புகாரை பெற மறுத்துவிட்டார்கள் என்று காவல் உயர் அதிகாரிகளிடம் மனு கொடுக்கவில்லை. 03.01.2019 அன்று குஜராத்

மாநிலத்திலிருந்து திரும்பி வந்தோம். நான் கூறுவதுபோல் ஒரு செயல் நடந்திருந்தால் உடனடியாக ஊர் திரும்பியிருப்பேன் என்றும் அதுபோன்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்பதால்தான் தாமதமாக ஊர் திரும்பியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் திரும்ப வந்து வழக்குரைச் சொத்திற்கு சென்றபோது பிரதிவாதிகள் என்னிடம் கொலை மிரட்டல் விடுத்ததாக கூறியுள்ளது தொடர்பாக புகார் கொடுத்தேன். அது தொடர்புடைய ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்குரை சொத்து தொடர்பாக ஆணையர் நியமனம் செய்யப்பட்டு அறிக்கை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிக்கைக்கு நான் ஆட்சேபனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் ஒரு வன்முறை நிகழ்த்தப்பட்டிருந்தால் பணியாட்களின் பொருள் உடைமைக்கும் சேதம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் அதுபோன்ற பொருட்கள் இருந்ததாக ஏதும் கூறப்படவில்லை என்றால் சரிதான். ஆணையர் அறிக்கையில் மரஅறுவை இயந்திரம், மற்றும் ஜெனரேட்டர் சொத்தில் ஒரு மூலையில் வைக்கப்பட்டிருந்ததாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அவ்வாறு எடுத்துரைக்கப்பட்ட பொருட்கள் சேதமடையாமல் இருந்தது என்றால் சரியல்ல. அந்த பொருட்கள் சேதமடைந்திருந்தன என்று ஆணையர் அறிக்கையில் குறிப்பிடாதது குறித்து நான் ஆட்சேபனை ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2018 ம் ஆண்டு இறுதியில் 2019 ம் ஆண்டு துவக்கத்தில் உறுத்துக்கட்டளை உத்தரவு பரிகாரம் கோரி

இடைமனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த மனுவில் சுவாதீன வன்முறையாக எடுத்துக்கொள்ளப்பட்டது என்றால் அந்த மனுவில் சீர்திருத்தம் செய்து மனுவை திருத்தவில்லை என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடியானது என்றால் சரிதான். அந்த உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 24.10.2019 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான். எங்களுடைய தொடர்ச்சியான வழக்கு நடவடிக்கைகள், இடையூறுகள் காரணமாக 1ம் பிரதிவாதி இறந்துபோனார் என்றால் சரியல்ல. பத்தி 17ல் ரூ.1,20,00,000/-மும், பத்தி 23ல் ரூ.3,60,00,000/- என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் கூறுவதுபோல் சம்பவம் நடைபெறவில்லை என்பதால்தான் எனக்கு ஏற்பட்ட இழப்பு குறித்து முன்னுக்குபின் முரணாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வழக்குரைச் சொத்தில் உள்ள கட்டிடம் மற்றும் உபகரணங்களில் சேதமதிப்பை தகுதி வாய்ந்த பொறியாளர் மூலம் நிர்ணயித்து அறிக்கை பெறவில்லை என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்கள் பொருட்கள் கொண்டு செல்வதற்கான புகைப்படங்கள் ஆகும். அந்த புகைப்படங்கள் வியாபார பொருட்களை கொண்டு வந்ததும், கொண்டு சென்றதுக்குமான புகைப்படங்கள் ஆகும். அந்த புகைப்படத்தில் உள்ள பொருட்களை நானே சொந்தமாக வழக்குரைச் சொத்திலிருந்து எடுத்துச் சென்றபோது எடுக்கப்பட்டவை என்றால் சரியல்ல. 10.10.2018 மற்றும் 04.02.2021 தேதிகளில் நான் வாடகை அனுப்பியதாக கூறுவது தொடர்புடைய ஆவணங்கள்

எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 09.02.2019 அன்று ஆணையர் பார்வையிடும்போது வழக்குரை சொத்தில் கட்டிடங்கள் ஏதும் இல்லாமல் இருந்தது என்றால் சரிதான். 09.02.2022 ற்குள் நான் மறுசீரமைப்பு செய்து தரவேண்டுமென்று வழக்குரையை திருத்தியிருக்க வேண்டுமென்றும் ஆனால் திருத்தப்பட்ட வழக்குரை அதற்கு காலம் கடந்த திருத்தம் என்பதால் எனது கோரிக்கை அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல. அது காலம் கடந்த கோரிக்கை என்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி ஒரு கைம்பெண் என்றும் தபசில் சொத்தினை விற்று வந்த தொகை மூலம் தனது குடும்பத்தை சீரமைக்கவேண்டுமென்ற சூழ்நிலையில் எனது தகப்பனார் குறைந்த விலைக்கு கிரையம் கேட்டார் என்றும் அதற்கு பிரதிவாதி மறுத்ததால் வீண் விரோதம் கொண்டு பொய்யான வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2018 ம்ஆண்டு ஜுன் மாதத்திற்கு பின்னர் வாதி தொழில் செய்யவில்லை என்றும் நாங்கள் வழக்கு சொத்திலிருந்து காலி செய்து சுவாதீனத்தை ஒப்படைத்த பின்னர் இந்த பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. 2 ம் பிரதிவாதி வழக்கிற்கு பின்னர் 2019 ம் ஆண்டு 3 ம் தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். ஒரு பகுதியை கிரையம் செய்து கொடுத்துள்ளார் எனவே சுவாதீனம் எங்கள் வசம் இருப்பதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.03.05 16:44:29 +0530